

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசுக் கல்லூரி மாணவியர் விடுதியை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, நகரச் செயலாளர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன்,கி.ராதா கிருஷ்ணன்,பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர் கு தவமணி, செயற்குழு உறுப்பினர் ராதா கிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அலுவலர்களின் பயன்பாட்டிற்காக

# வணிகவரித்துறையில் ரூ.2.02 கோடி செலவில் 23 புதிய வாகனங்கள்!

## அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார்!

சென்னை, மே 20 - வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (19.05.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முன்னதாக அமைச்சர் பி.மூர்த்தி, வணிகவரித்துறையில் ரூ.2.02 கோடி செலவில் புதிதாக வாங்கப்பட்ட 23 வாகனங்களை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர், கடந்த நிதி ஆண்டில் வரி வருவாய் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாக செயல்பட்ட ஆணையர் மற்றும் அனைத்து உயர் அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவித்து, நடப்பு நிதி ஆண்டிலும் அதே முனைப்புடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு அரசு நிர்ணயித்துள்ள வருவாய் இலக்கினை அடைவதற்கு அனைத்து இணை ஆணையர்களும் சிறந்த முறையில் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா.பூங்கொடி, மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாவட்டம் – மருதமலையில்

# 184 அடி உயரமுள்ள முருகன் சிலை அமைக்கப்படும் இடம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

கோவை, மே.20- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (18.05.2025) கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டதைத் தொடர்ந்து பேரூர், பட்டீசுவரர் சுவாமி திருக்கோயிலில் ரூ. 13.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அன்னதானக் கூடம், பசுமடம், தர்ப்பண மண்டபங்கள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் 184 அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தினையும், சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில் நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமைக்கப்படவுள்ள இடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சீர்மிகு ஆட்சியில் திருக்கோயில்களுக்கு குட முழுக்குகள், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், அன்னதானக் கூடங்கள், தர்ப்பண மண்டபங்கள், பசுமட காப்பகங்கள் என அனைத்து பணிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து நிறை வேற்றப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டம், பேரூர், பட்டீசுவரசுவாமி திருக்கோயி லுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் குட முழுக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இத்திருக்கோயிலில் தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில் 50 நபர்கள் அமர்ந்து தர்ப்பணம் செய்கின்ற வகையில் ரூ.11.85 கோடி செலவில் மிகப் பெரிய அளவில் தர்ப்பண மண்டபம், சுகாதார வளாகம், காத்திருப்புக்கூடம், தகவல் மையம், படித்துறை சீரமைப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்றவை திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திருக்கோயிலில் ரூ.55 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், ரூ.51 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பசுமடம், ரூ.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கான கழிப்பிட வசதி போன்றவை பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்றைய தினம் 9 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றன. அதில் ஒன்றாக தொண்டாமுத்தூர் மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் 20,000 மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் 2,948 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் திருப்பணிகளுக்கு உபயதாரர் நிதியாக ரூ.1,339 கோடி வரப்பெற்றுள்ளன. இவை திருப்பணிகளுக்கு முறையாக செலவிடப்படுகிறது. அந்த வகையில் பட்டீசுவரசுவாமி திருக்கோயிலின் தர்ப்பண மண்டபம் கட்டுவதற்கு நிதியினை வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இத்துறை யின் அமைச்சர் என்ற வகையில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருதமலை சுப்பிரமணியசுவாமிதிருக்கோயில் அடிவாரத்தில் ஆசியாவிலேயே மிக உயரமாக 184 அடியில் முருகன் சிலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். அந்த சிலை அமைக்கும் பணிக்கான இடத்தினையும், இந்தாண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமையவுள்ள இடத்தினையும் ஆய்வு செய்தோம். வெகுவிரைவில் முருகன் சிலை அமைக்கும் பணிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் பி. இரமேஷ், மருதமலை அறங்காவலர் குழுத் தலைவர் ஜெயக்குமார், துணை ஆணையர்கள் திருமதி ஆர்.விஜயலட்சுமி, இரா.செந்தில் குமார், உதவி ஆணையர்கள் திருமதி பி.இந்திரா, திருமதி கா.விமலா, யு.எஸ்.கைலாசமூர்த்தி, செயற்பொறியாளர் திருமதி ரேவதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்டம் தெற்கு வாசல் பகுதி திமுக சார்பாக நடைபெற்ற கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, பகுதிச் செயலாளர் ரமேஷ் குமார் என்ற ஜீவன் தலைமையில் கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஒச்சுபாலு, சின்னம்மாள், முகேஷ் சர்மா, சௌந்தரராஜன், அன்பு என்கிற துரைகோபால்சாமி, மாரிமுத்து, ஜெயஸ்ரீ ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் காதர் பக்கீர், தீர்மானகுழு அக்ரி கணேசன், பொதுக்குழு பி.டி.மணிமாறன், முத்து கணேசன், ஏ.கே.ஆறுமுகம், செய்யது அபுதாஹிர், விவசாய அணி காவேரி சொக்கலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி அவர்கள் நேற்று (19.05.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ.2.02 கோடி செலவில் 23 புதிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## அரசு ஊழியர்களுக்கு ஆயுள் – விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கிச் சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட ஏற்பாடு!

சென்னை, மே. 20- அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்க முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (19.5.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன.

அரசு ஊழியர்களின் நலனிலும் அவர்தம் குடும்பத்தினரின் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அரசு ஊழியர்களுக்கான ஈட்டிய விடுப்பினை இவ்வாண்டு முதலே வழங்க உத்தரவு வழங்கியும், அரசு ஊழியர்களின் நலன்காக்க பல்வேறு சலுகைகளையும் இச்சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவித்தார். ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக தமிழ்நாடு வளர்ச்சியில் தன்னிகரற்று முன்னேறும் நிலையில், வளர்ந்த நாடுகளில் தனிநபர் ஆயுள் காப்பீடு மற்றும் விபத்துக் காப்பீட்டினைக் கட்டாயமாக வைத்திருப்பது நடைமுறையில் உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் தனிநபர் ஒருவர் ஆயுள் காப்பீடு மற்றும் தனிநபர் விபத்துக் காப்பீடு போன்றவற்றினைப் பொதுச்சந்தையில் பெற்றிடும் போது பெரும் தொகையினைச் செலவு செய்திட வேண்டியுள்ளது. இந்நிகழ்வுகளில், அரசு ஊழியர்கள் ஆயுள் காப்பீடு மற்றும் தனிநபர் விபத்துக் காப்பீடு போன்றவற்றிற்கு பெரும் தொகையைச் செலவழிப்பதைத் தவிர்த்து காப்பீடுகளை கட்டணமின்றிப் பெறும் வகையில் செய்திட அரசு உத்தேசித்ததன் அடிப்படையில் முன்னோடி வங்கிகளிடம் இதுகுறித்து நடத்தப்பெற்ற பேச்சுவார்த்தையின் பலனாக பல சலுகைகளை வங்கிகள் தர முன்வந்துள்ளன.

மேலும், இதுகுறித்து நிதி அமைச்சர் அவர்கள் தற்போது நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரின் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்த போது, அரசு அலுவலர்கள் எதிர்பாராத விதமாக விபத்தில் இறந்து போனாலோ அல்லது விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமடைந்தாலோ தனிநபர் விபத்து காப்பீட்டு தொகையாக 1 கோடி ரூபாய் நிதியினையும், விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகளின் திருமண செலவுகளுக்காக மகள் ஒருவருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், இரண்டு மகள்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவியும், விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக்கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர் கல்வி பயின்றிடும் மகளின் உயர்கல்விக்கான உதவித்தொகையாக 10 இலட்சம் ரூபாய் வரையும், அரசு அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் எதிர்பாராமல் இயற்கை மரணம் அடைந்தால் ஆயுள் காப்பீட்டு தொகையாக 10 இலட்சம் ரூபாயும் வங்கிகள் வழங்கிடும் எனத் தெரிவித்தார்கள்.

மேற்குறிப்பிட்ட இச்சலுகைகளை வழங்க பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, ஆக்ஸிஸ் வங்கி, பாங்க் ஆப் பரோடா மற்றும் யூனியன் பாங்க் ஆப் இந்தியா ஆகிய 7 முன்னோடி வங்கிகள் அரசு ஊழியர்கள் தங்களது ஊதியக்கணக்கினைப் பராமரித்து வரும் பட்சத்தில் எந்த விதக் கட்டணமுமின்றி வழங்கிட முன்வந்துள்ளன. மேலும், இச்சலுகைகள் மட்டுமின்றி தனிநபர் வங்கிக் கடன், வீட்டுக் கடன், கல்விக் கடன் ஆகியவற்றை அரசு அலுவலர்கள் பெறும்போது உரிய வட்டி சலுகைகள் வழங்கிடவும் முன்வந்துள்ளன.

இந்த சலுகைகளை வங்கிகள் அரசு ஊழியர்களுக்கு வழங்குவதை உறுதி செய்யும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அரசு சார்பில் கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் மற்றும் முன்னோடி வங்கிகளின் உயர் அலுவலர்களால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டன.

இந்நிகழ்வில், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலாளர் (செலவுகள்) எஸ்.நாகராஜன், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி.சாருஸ்ரீ மற்றும் வங்கிகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் (வடக்கு) மாவட்டங்களின் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை வடக்கு, சென்னை தெற்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் 21.5.2025 அன்று பகல் 12.30 மணியளவில், சென்னை தியாகராயர் நகர் அகார்டு ஓட்டலில் நடைபெறும்.

கூட்டத்தில் மேலே குறிப்பிட்ட மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


நாள் 19.5.2025

**ஆ.இராசா எம்.பி.**
துணை பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# டி.எம். பார்த்தசாரதி

## மே 20 (1984)



**கழக வரலாற்று நூல் ஆசிரியர். தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பிற்குரியவர்.**

**கழகம் தோன்றியபோது, நமது கொள்கைகளை எடுத்துக்கூற "மாலைமணி" எனும் நாளேடு கண்டவர்.**

**"பெரியார் அவர்களின் பகுத்தறிவு சூறாவளி பிரச்சாரப் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர், எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்! என்ற வைராக்கிய உள்ளம் படைத்தவர், களம் பலகண்டவர், பலமுறை சிறை சென்ற தியாக சீலராக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**